8. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(இ) தமிழ்நாடு பெருநகர் திட்டக் குழு சட்டமுன்வடிவு, 2009 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2009 ஆம் ஆண்டு தமிழ்நாடு பெருநகர் திட்டக் குழு சட்டமுன்வடிவைப் (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 8/2009) பேரவையில் ஆய்வு செய்ய, மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவினைத் தெரிவித்துள்ளார்கள்.

12. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—தொடர்ச்சி

(ஊ) தமிழ்நாடு பெருநகர் திட்டக் குழு சட்டமுன்வடிவு, 2009

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2009 ஆம் ஆண்டு தமிழ்நாடு பெருநகர் திட்டக் குழு சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 8/2009), மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2009 ஆம் ஆண்டு தமிழ்நாடு பெருநகர் திட்டக் குழு சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 8/2009)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (குறுக்கீடுகள்)

எல்லாம் நிறைவேறிய பிறகு என்ன? (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

@ 22-6-2009 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.